# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2086/10 - 2018 අගෝස්තු මස 27 වැනි සඳුදා - 2018.08.27

**2086/10 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 27 ஆந் திகதி திங்கட்கிழமை**

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக்க ஆகிய நான், இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

மத்திய மாகாணத்தில், மாத்தளை மாவட்டத்தில், இரத்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவில், மாத்தளை பல்லேசிய பத்துவ சிறு பிரிவில் குருவாவ கிராமத்தில் அமைந்துள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் 2018.01.29 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட பூர்வாங்க முன்னீட்டுச் சுவட்டு இல. எம்ஏ/ ஆர்டிடி/ 2017/ 659 இல் குறிப்பிடப்பட்ட சுமார் 0.0836 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய நெலுகொச்கஹமல வத்த எனும் இலக்கமுடைய காணித்துண்டுகளின் எல்லைகள் :

வடக்கு : குமார ஹேவாபதிரண உரிமைகோரும் பல்லேகெதர வத்த மற்றும் எஸ். ஜீ. ஐ. ஜீ. வீரசிங்ஹ உரிமை கோரும் பல்லேகெதர வத்த ; கிழக்கு : எஸ். ஜீ. ஐ. ஜீ. வீரசிங்ஹ உரிமை கோரும் பல்லேகெதர வத்த மற்றும் வீதி (பிரதேச சபை) ; தெற்கு : டபிள்யூ. கே. திசானாயக உரிமைகோரும் நலுகொச்சகஹமல வத்த ; மேற்கு : யசரத்ன மற்றும் சிலரும் உரிமை கோரும் பந்சயாவத்த, கருணாரத்ன மற்றும் சிலரும் உரிமைகோரும் பந்சயாவத்த மற்றும் குமார ஹேவாபதிரண உரிமை கோரும் பல்லேகெதர வத்த.

கயந்த கருணாதிலக்க,
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர்.

குறிப்பு இல. : 4- 3/9/2017/டபிள்யூஎஸ்/400.
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு,
'மிஹிகத மெதுர',
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2018 ஓகத்து, 02.

9 - 240